

# சிறுமலை விவசாயிகளை உயர்த்தும் கருப்புத்தங்கம் `மிளகு'

கூடிதொழில் செய்வோம்

அய்யன்

வெள்ளையர்கள் உலக நாடுகளை எல்லாம் தேடிச் சென்று அடிமைப்படுத்தி காலனியாக்கும் முயற்சியில் இறங்கியதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், அவர்களுக்கான உணவுக்கான தேவைக்கான சில பொருட்களை பெறுவதும் ஒரு காரணமாக இருந்தது. அந்த வகையில் இந்தியா அவர்களுக்கு பொன் விளையும் பூமியாக தென்பட்டது. குறிப்பாக, அவர்கள் சொக்கிப் போனது தமிழகத்தில் விளைந்த ஏலக்காய், மிளகு, கிராம்பு ஆகியவற்றின் மணத்தையும், குணத்தையும் பார்த்து சொக்கிப் போனார்கள்.

வெள்ளையர்கள் காலத்தில் கம்பம் மேகமலை முழுவதும் விளையும் ஏலக்காய்க்காக மதுரையில் இருந்து போடி பகுதிக்கு தனி ரயில் பாதையையே அமைத்தார்கள். அறுவடை செய்த ஏலக்காய், மிளகுகளை இங்கிலாந்துக்கு அனுப்பி வைப்பார்கள் என்றால் இதன் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ளலாம். ஐரோப்பிய பெண்களுக்கு



மிளகின் மகத்துவம் தெரியும். அவர்கள் கருப்பு மிளகை தங்களது திருமணச்சீர் பொருளாக கொண்டு செல்கிறார்கள். இன்றைக்கும், தமிழகத்திலும், கேரளத்திலும் விளையும் ஏலக்காய், கிராம்பு, மிளகு, இலவங்கம் போன்ற வாசனைப் பொருட்களுக்கு கடும் கிராக்கி உள்ளது. ஆனால், இதில் அவ்வளவாக அறியப்படாத இன்னொன்று சிறுமலை மிளகு.

சிறுமலையில் விளையும் மிளகும் சுவைமிக்கதாகவும், மருத்துவ குணம் மிக்கதாகவும் உள்ளதால் ஏற்றுமதியில் தனி மதிப்பைப் பெற்று வருகிறது. சிறுமலையில் விவசாயிகள் நலன் கருதி உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பை உருவாக்கி உள்ளது மதுரை வாடிப்பட்டியில் செயல்படும் கிரெட் தொண்டு நிறுவனம். இந்த நிறுவனத்தின் தலைவர் அழகேசன். இவரின் செயல்பாட்டின் மூலம் உருவாகியிருக்கும் இந்த சிறுமலை காய்கறிகள் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பில் மிளகு சாகுபடி செய்யும விவசாயிகள் மிளகு சாகுபடியில் தங்கள் அனுபவங்களை கூறினார்கள்.

கூட்டமைப்பின் தென்மலை தம்பிராஜ் 'இந்தச் சிறுமலையில் மழைப்பொழிவு மட்டும் ஒவ்வொரு ஆண்டுக்கும் சரியாக அமைந்து விட்டால், இந்த சிறுமலைத் தாய்மடி அமுதத்தை சுரந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு விவசாயியும், வாழை, பலா, மிளகு, காப்பி, அவகோடா, ஒக், பட்டர்பீன்ஸ், அவரை, மொச்சை, எலுமிச்சை என்று ஏராளமான பயிர்களை முழுக்க அறுவடை செய்து கொண்டேயிருக்கலாம். ஒருவரால் எந்தளவுக்கு உழைப்பைச் செலுத்த முடியுமோ அந்தளவுக்கு விளைச்சலை இந்த சிறுமலை மண் விளைவாகத் தந்து விடும்.

இருந்த போதும் அனைத்து நிலத்தில் உள்ள விவசாயிகளையும் விட கூடுதலான

## கிரெட் நிறுவனம்

“கிரெட் நிறுவனம் மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் 1987ல் தொடங்கப்பட்டது. குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, பெண்கள் பொருளியல் மேம்பாடு, சூழல் காப்பு இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆகும். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுமலைப் பகுதி உழவர்களின் வாழ்வு மேம்பாடு, உரிமைகளுக்காகவும் இயங்கி வருகிறது. இந்தப் பகுதி விவசாயிகளின் பிரச்சினைகளை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் நபார்டு வங்கி மேலாளர்கள் கவனத்திற்கு கிரெட் நிறுவனம் கொண்டு சென்றதன் மூலம் பல்வேறு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. தற்போது, வாரம் ஒரு நாள் குடிமைப் பொருட்கள் நேரடியாக சிறுமலைக்கே வந்து வழங்கப்படுகிறது. இம்மக்களுக்கான வாக்குசாவடியும் சிறுமலையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. இது தவிர காட்டு மரங்களை அடையாளம் தந்து காப்பது, நீர்நிலைகளை ஒழுங்கு செய்வது, உழவர்களுக்கான இயற்கை வேளாண் தொழில் நுட்பங்களை கற்றுத் தருவது என்று பல்வேறு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று சிறுமலை காய்கறிகள் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு இந்தோஷனியாவிற்கு மிளகு ஏற்றுமதி செய்து புதிய உயரத்தை எட்டியுள்ளது.”

ஒரு சிரமம் மலைமக்களுக்கு மட்டுமே உண்டு. அது என்னவென்றால், இங்கு உள்ள விளைச்சல் பொருட்களை அருகில் உள்ள திண்டுக்கல், மதுரை சந்தைக்கு கொண்டு சேர்க்க வேண்டும். இதற்கான சாலை நன்றாக இருக்க வேண்டும். இவ்வளவு அரும்பாடுபட்டு விளைவித்த பொருட்களுக்கு விலையோ நாங்கள் எண்ணியது போல் இருந்தது இல்லை.



சந்தையில் அவர்கள் நிர்ணயித்ததை பெற்றுக் கொண்டு பொருளை விற்று வர வேண்டியது தான்.

எமது தேவைக்கான எரு, உரம், போன்றவற்றிற்கு அன்றாடத் தேவை இருந்து கொண்டு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தான் கிரெட் தொண்டு நிறுவனம் மற்றும் சிறுமலை விவசாயிகள் கைகோர்த்ததால் சிறுமலை காய்கறிகள் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த கூட்டமைப்பில் 350 உழவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கான பயிர் சாகுபடி கடனாக நாங்கள் எங்கள் நிறுவனத்திடமிருந்தே ரூ. 1 வட்டிக்கு பெற்று திரும்ப அடைக்கிறோம். அடுத்ததாக எங்கள் மிளகு உள்ளிட்ட விளை பொருட்களை அறுவடை நேரங்களில் குறைந்த விலைக்கு விற்காமல் இருப்பு வைத்து விற்கிறோம். இதனால் ஒரு விவசாயிக்கு கிலோவுக்கு ரூ. 50/– முதல் ரூ. 100/– வரை கூடுதலாக பெற முடிகிறது. இது தவிர, எங்களுக்கான இடுபொருள்களையும் மொத்தமாக வாங்கி பகிர்ந்து கொள்ள ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். இதற்கான உதவிகளை நபார்டு வங்கி மூலம் பெற்று வருகிறோம்' என்றார்.

சிறுமலை புதூர் ரவிச்சந்திரன் எனது சாகுபடிகளில் மிளகு முதன்மையான பயிராக உள்ளது. எனது காட்டில் 4 வகையான மிளகுக் கொடிகள் பயிரிட்டுள்ளேன். 1 ஏக்கரில் குறைந்தது 100 மரங்களில் நட்டு வளர்க்கலாம். இந்தக் கொடி வளர 2 ஆண்டுகள் பிடிக்கும். அது வரைக்குமான உழைப்பை நாங்கள் எங்களுக்குள் விவசாயிகளாகவே குடும்பத்துடன் கூட்டுழைப்பாக செய்து வருகிறோம். 2 ஆண்டுகளுக்கு செய்து வரும் முதலீட்டுச் செலவுகளை உழவர்



உற்பத்தியின் கூட்டமைப்பு மூலம் பெறுவது பெரு உதவியாக உள்ளது.

இது தவிர சூடோமோனஸ், விரிடி போன்ற இயற்கை இடுபொருள்களை பயன்படுத்த கிரெட் அளித்த பல்வேறு பயிற்சிகள் எங்களுக்கு உதவியாக இருந்தன. சராசரியாக 1 கொடியில் இருந்து 3 கிலோ மிளகு அறுவடை செய்யலாம். மிளகு மற்றும் காப்பி இரண்டுக்குமே குப்பை மட்டுமே வைப்பதால் பெரிய செலவுகள் இதற்கு கிடையாது. கொடி ஏறிக்கட்டுவது, ஆண்டுக்கு 3 அறுவடை ஆகியவை தான் அதிகபட்சமாக மனித உழைப்புக்கான செலவாக இருக்கும். மிளகுக் கொடிகளை வேர்ப்பூச்சிகள் தாக்கும். இதனை கட்டுப்படுத்த சூடோமோனசுடன் கலந்த மட்கிய தொழு எருவை பயன்படுத்தி கட்டுப்படுத்துகிறோம்.

கடந்த ஆண்டில் 6000 கிலோ மிளகை இருப்பு வைத்து விற்க ரூ. 125/- அதிகமாக உழவர் உற்பத்திக்கு கூட்டமைப்புக் கிடைத்தது மேலும் இந்தோனேசியாவிற்கு 2000 கிலோ மிளகை நேரடியாக ஏற்றுமதி செய்ததில் கிலோவுக்கு ரூ. 100/– கூடுதலாக கிடைத்தது. இதற்கான முயற்சியாக மிளகை ஏற்றுமதித் தரத்திற்கு தரப்படுத்த வேண்டியுள்ளது. இந்த மாதிரியான முயற்சிகள் உழவர்களே செய்து விட்டால் மிளகை ஏற்றுமதி செய்து உழவர்களே நேரடியான பலனைப் பெறலாம் என்ற கருத்தை தெரிவித்தார்.

மீனாட்சிபுரம் சிவக்குமார் 'பொதுவாக மிளகை சில்வர் ஓக் என்று சொல்லக்கூடிய மரங்களிலேயே ஏற்றிவிடுகின்றனர். ஆனால் இலவம் பஞ்சு போன்ற மரங்களிலோ அல்லது காட்டு மரங்களிலேயே கூட மிளகை ஏற்றி விடலாம். இதற்கான வேலை மட்டுமே கூடுதலாக இருக்கும். இருந்தபோதிலும் மிளகு விளைச்சல் இலவம் பஞ்சு மரத்தில் இரண்டு மடங்காக கிடைக்கும். மேலும் இலவம் பஞ்சு மரத்திலிருந்து விழும் கழிவுப் பிஞ்சுகள் இந்த மண்ணிற்கு நல்ல இயற்கை மூடாக்காக இருக்கும்.

மரம் முழுவதுமாக விழுந்து மடிந்து விட்டால் கூட அது மண்ணில் உயிர்சத்துக்களை நிலைநிறுத்தவும், மண்ணின் நீர்பிடிப்புத் தன்மையை அதிகரிக்கவும் செய்யும். மிளகு உற்பத்தியில் சில்வர் ஓக் போன்றவற்றை கிளைகள் அற்ற மரங்களாக இருக்கும் காட்டுபறவைகள் வாழ ஏதுவற்றதாக உள்ளது. இலவம் பஞ்சு மரம் மற்றும் காட்டுமரங்களை மிளகு ஏற்ற கொடிமரங்களாக பயன்படுத்துவதன் மூலம் சிறுமலையை மீண்டும் அடர்த்தியான பல்லுயிரியம் வாழும் காடாக உயிர்ப்புடன் உருவாக்கலாம்' என்றார்.

தொடர்புக்கு : அழகேசன், கிரெட் நிறுவனம். பேசி : 94434 68079